**NAAN MUDHALVAN & ALL INDIA CIVIL SERVICES COACHING CENTRE (AICSCC)**

**NOTIFICATION OF UPSC PRELIMS SCHOLARSHIP EXAM -2025**

'Naan Mudhalvan' is a visionary initiative launched by the Hon'ble Chief Minister of Tamil Nadu, designed to shape a brighter future for the State. As part of this transformative program, the **Naan Mudhalvan Competitive Exams Vertical** was established with a primary focus on empowering the Youth of Tamil Nadu to excel in competitive exams conducted by Union Government recruitment agencies. Through comprehensive training and dedicated assistance, this vertical aims to equipyoung individuals with the skills and resources they need to succeed in these demanding exams and increase the proportion of Tamil Nadu Candidates in Union Government Services.

In the Budget Speech 2023 – 2024 of Tamil Nadu, it has been announced that Tamil Nadu Skill Development Corporation (TNSDC) will implement a scheme in coordination with **All India Civil Service Coaching Centre** to help **civil services aspirants** to access better coaching facilities and materials to reverse the declining number of Students from Tamil Nadu clearing UPSC Civil Services Exam. Under this Scheme, **every year 1,000 civil services aspirants will be shortlisted through a screening test**. **Each aspirant will be provided Rs.7,500 per month for 10 months to prepare for the preliminary examination.**

Therefore, TNSDC under its Naan Mudhalvan Competitive Exams Vertical is conducting a Screening Test known as "**NAAN MUDHALVAN UPSC PRELIMS SCHOLARSHIP EXAM 2025"** on **26.07.2025** to shortlist 1000 Candidates to provide the monthly scholarship of Rs. 7,500 for the students preparing for the upcoming UPSC CSE Prelims 2026.

As this Scholarship Exam is conducted in coordination with the **All-India Civil Services Coaching Centre**, which functions under the Anna Administrative Staff College, **separate Entrance Test will not be conducted by the All India Civil Service Coaching Centre** for admission to All India Civil Service Coaching Centre, Chennai and **Anna Centenary Civil Services Coaching Academies**, Coimbatore and Madurai.

Therefore, the score card of "**NAAN MUDHALVAN UPSC PRELIMS SCHOLARSHIP EXAM"** will also be used for shortlisting **225 Aspirants for Full-Time residential programme, 100 Aspirants for Part-Time training programme of All India Civil Services Coaching Center, R A Puram, Chennai and 100 Aspirants each for Full- Time residential programme of the Anna Centenary Civil Services Coaching Academies (ACCSCA), Coimbatore and Madurai.** For admission to this training programme, **a separate online application will be released by AICSCC to receive student's preference for residential/parttime training at various centres viz AICSCC, Chennai and ACCSCA, Coimbatore and Madurai.** Merit list for each centre will be prepared based on NM Score card, Existing Reservation and Student's Preference for seat allocation.

**EDUCATIONAL QUALIFICATION**

Minimum Educational Qualification : The Candidate must hold a degree of any recognized University in India.

**AGE ELIGIBILITY**: (as on 01.08.2026)

Minimum - 21 years
Maximum - As given below

1. SC/ST/SC (A) candidate should not be above 37 Years of age.
2. Differently Abled candidate from any community should not be above 42Years.
3. BC/BC (M) / MBC/DNC candidates should not be above 35 Years.
4. General candidates should not be above 32 Years.

**Note:**

1. Naan Mudhalvan UPSC Prelims scholarship has been **restricted to two times per student.** Hence, the Candidates who have received NM Prelims Scholarship for the years 2023- 2024 and 2024-2025 are not eligible for this UPSC Prelims Scholarship Exam 2025. However, candidates interested to take part in AICSCC residential/ part time coaching in Chennai and ACCSCA residential coaching in Coimbatore and Madurai shall apply for the above exam, since the same score card will be utilized for the residential/ part time training.
2. The candidates will be shortlisted for Naan Mudhalvan UPSC Prelims Scholarship programme based on their marks obtained in the screening test and as per reservation policy of Government of Tamil Nadu.

**IMPORTANT DATES**

| S.No. | Event | Date |
|---|---|---|
| 1. | Date of notification | 26.06.2025 |
| 2. | Commencement of Online Application | 26.06.2025 |
| 3. | Last Date for Submission ofapplication | 10.07.2025 |
| 4. | Issue of Hall Ticket | 3rd week of July |
| 5. | **Date and Time of Examination** | 26.07.2025 **(10.00 am–12.00 pm)** |

**SCREENING TEST CENTERS:**

1. Exam Centers are available **in all 38 Districts** of Tamil Nadu. The Candidates should choose any one center for writing the examination in the application form. The venue of the center will be intimated in the Hall Ticket.
2. TNSDC reserves the right to increase or decrease the number of examination centers to re-allot the applicants accordingly.
3. Applicants should appear for the examination at their own expense.

**PROCEDURE TO APPLY:**

The candidates are requested to apply only through Online mode in the following link: https://portal.naanmudhalvan.tn.gov.in/prelims_registration/

***Note:**

1. The candidates who are already employed in the Government are not eligible to Apply for this Scholarship Exam.
2. The Students who avail this scholarship must apply for the UPSC CSE Prelims Exam-2026. The scholarship will be stopped for the candidates who fail to apply and submit the documents to TNSDC.

**SCHEME OF EXAMINATION**

The pattern of the exam is as follows:

| | |
|---|---|
| Mode of Exam | Objective Type (OMR based) |
| Total No. of Questions | 100 (90 General Studies + 10 CSAT) |
| Marks per Question | 2 |
| Total Marks | 200 |
| Exam Duration | 2 Hours |

*** Note:**

1. 1/3rd Negative Marks will be awarded for Wrong Answers.
2. Questions will be in English Only.

**SYLLABUS OF THE EXAM**

**General Studies:**

1. Current events of national and international importance.
2. History of India and Indian National Movement.
3. Indian and World Geography-Physical, Social, Economic Geography of India and the World.
4. Indian Polity and Governance – Constitution, Political System, Panchayat Raj, Public Policy, Rights Issues, etc.
5. Economic and Social Development – Sustainable Development, Poverty, Inclusion, Demographics, Social Sector initiatives, etc.
6. General issues on Environmental Ecology, Biodiversity and Climate Change – that do not require subject specialization.
7. General Science

**CSAT**

1. Logical reasoning and analytical ability
2. General mental ability
3. Basic numeracy (numbers and their relations, orders of magnitude, etc.) – Class X level)
4. Data interpretation (charts, graphs, tables, data sufficiency etc. – Class X level)

**COMMUNAL RESERVATION DETAILS:**

## 2. ALL INDIA CIVIL SERVICES COACHING CENTRE

In addition to the scholarship, the **same score card** will be used for shortlisting the Candidates of **All India Civil Services Coaching Center (AICSCC)**. i.e., 225 candidates for Full - Time residential coaching and 100 Candidates for Part - Time coaching in R A Puram, Chennai and 100 Candidates for Full - Time Residential Coaching at Coimbatore and 100 Candidates for Full - Time Residential Coaching at Madurai.

For admission to this training programme, **a separate online application will be released by AICSCC to receive student's preference for residential/parttime training at various centres viz AICSCC, Chennai and ACCSCA, Coimbatore and Madurai.** Merit list for each centre will be prepared based on NM Score card, Existing Reservation and Student's Preference for seat allocation.

The guidelines for applying for AICSCC coaching is given below,

**COMMUNAL RESERVATION DETAILS for AICSCC:**

| Type of Coaching | SC | SC(A) | ST | MBC/ DNC | BC | BC(M) | GENERAL /OC | Total Seats |
|---|---|---|---|---|---|---|---|---|
| Residential (Full Time) **Chennai** | 89 | 18 | 6 | 40 | 54 | 7 | 11 | 225 |
| Non-Residential (Part Time) **Chennai** | 40 | 8 | 2 | 18 | 24 | 3 | 5 | 100 |
| Residential (Full Time) **Coimbatore** | 40 | 8 | 2 | 18 | 24 | 3 | 5 | 100 |
| Residential (Full Time) **Madurai** | 40 | 8 | 2 | 18 | 24 | 3 | 5 | 100 |

***Note:** 4 % of seats for the differently abled person may be arrived out of the quota reserved for each category.

**Fees:**

Full – Time & Part- Time - **NIL**

| **Students Category (Community)** | **Caution Deposit (Refundable)** |
|---|---|
| Candidates belongs to SC/ST/SC(A)/BC/BC(M)/MBC/DA and OC(GENERAL) | Rs.3000/- |

* Caution Deposit is mandatory Only for Chennai center

**Classes:**

a) Full-Time (Residential) Classes will be conducted between 10.00 A.M to 5.00 P.M.
b) Part-Time (Non-Residential) Classes will be conducted on week days between 6.00 P.M. to 8.00 P.M and between 10.30 A.M to 5.30 P.M on Saturdays & Sundays

**Hostel:**

a) Candidates selected for the Residential Stream will be eligible for free Boarding and Lodging.
b) Candidates selected for Part-Time (Non-Residential) streams are not eligible for hostel accommodation.

**For further Queries Please Contact:**
**Phone: 9043710214 / 9043710211**
**Email: nmcegrievances@naanmudhalvan.in**

**Sd/-**
**Managing Director**

**நான் முதல்வன் மற்றும் அகில இந்திய குடிமைப் பணிகள்**
**பயிற்சி மையம்**
**தமிழ்நாடு அரசின் யு.பி.எஸ்.சி முதல்நிலை தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டம்**
**மதிப்பீட்டுத் தேர்வுக்கான அறிவிப்பு – 2025**

'நான் முதல்வன்' என்பது மாநிலத்திற்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட தொலைநோக்குத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவானது, தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளில் சிறந்து விளங்க தேவையான உதவிகளைச் செய்வதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டு துவங்கப்பட்டது. இப்பிரிவானது போட்டித்தேர்வுகளுக்கு தயாராகி வரும் இளைஞர்களுக்குத் தேவையான விரிவான பயிற்சி, திறன்கள் மற்றும் பிற உதவிகளை, எளிதில் அணுகக்கூடிய வண்ணம் செயல்பட்டு வருகிறது. இது குடிமைப் பணி தேர்வில் தேர்ச்சி பெறும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தமிழக அரசால் எடுக்கப்பட்டிருக்கும் மாபெரும் முயற்சியாகும்.

இந்நிலையில், 2023–24 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்துடன் (AICSCC) இணைந்து, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காகப் பயின்று வரும் ஆர்வமுள்ள தமிழ்நாட்டு மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச் செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராகி வரும் 1,000 மாணவர்களை, மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்து மாதம் ரூ.7,500 வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படும். இத்திட்டம் கடந்த 2023–ஆம் ஆண்டு முதல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் உள்ள நான் முதல்வன் போட்டித் தேர்வுப்பிரிவின் மூலம், 2026– ம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் முதல் நிலை தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு 26.07.2025 அன்று நான் முதல்வன் யூ.பி.எஸ்.சி முதல்நிலை ஊக்கத்தொகை தேர்வை நடத்தி, தேர்ந்தெடுக்கப்படும் 1000 மாணவர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.7,500 பத்து மாதங்களுக்கு வழங்கப்படும்.

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்துடன் ஒருங்கிணைந்து இந்த ஊக்கத்தொகைத் தேர்வு நடத்தப்படுவதால், **அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் சென்னை, கோவை மற்றும் மதுரையில் இயங்கி வரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்களுக்கு, தனி நுழைவுத் தேர்வு நடத்தப்படாது**.

எனவே, "நான் முதல்வன் யூ.பி.எஸ்.சி முதல்நிலை ஊக்கத்தொகை தேர்வு 2025"–ன் மதிப்பெண் சான்றானது, அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தின், சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் இயங்கி வரும் மையத்தின் முழுநேரப் பயிற்சிக்கு 225 விண்ணப்பதாரர்கள், பகுதி நேர பயிற்சிக்கு 100 விண்ணப்பதாரர்கள், கோவை மற்றும் மதுரையில் இயங்கி வரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்களின் முழுநேரப் பயிற்சிக்கு தலா 100 பேரை தேர்வு செய்வதற்கும் பயன்படுத்தப்படும். **மேற்படி பயிற்சி மையங்களைத் தேர்வு செய்வதற்கான விருப்பம் கோரும் விண்ணப்பம் அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தால் பின்னர் தனியாக வெளியிடப்படும்.**

**கல்வித் தகுதி:**

**குறைந்தபட்ச கல்வித் தகுதி:**

விண்ணபதாரர் இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு இளநிலை பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது தகுதி *(01.08.2026 அன்று):***
**குறைந்தபட்சம் – 21 ஆண்டுகள்**

**அதிகபட்ச வயது:**

**அ)** ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆதிதிராவிடர்(அருந்ததியர்) 37 வயதுமிக்க மிகாதவராக இருக்க வேண்டும்.
**ஆ)** மாற்றுத்திறனாளி மாணவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருப்பினும் 42 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

**இ)** பிற்படுத்தப்பட்டவோர்/பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 35 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

**ஈ)** பொதுப்பிரிவினர் 32 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.

**குறிப்பு:**

1. நான் முதல்வன் UPSC முதல்நிலைத் தேர்வு உதவித்தொகை மாணவர் ஒருவருக்கு இரண்டு முறை மட்டுமே வழங்கப்படுகிறது. ஆகையால், 2023–2024 மற்றும் 2024–2025 ஆம் ஆண்டுகளில் NM முதல்நிலைத் தேர்வு உதவித்தொகையைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் இந்த 2025 UPSC முதல்நிலைத் தேர்வு உதவித்தொகைத் தேர்வுக்குத் தகுதி பெற மாட்டார்கள். இருப்பினும், அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம் (AICSCC) , சென்னை மற்றும் அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணி பயிற்சி மையம் (ACCSCA), கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகியவற்றில் வழங்கப்படும் உண்டு/உறைவிடப் பயிற்சி அல்லது பகுதிநேரப் பயிற்சியில் பங்கேற்க ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிட்ட இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம், ஏனெனில் இத்தேர்வில் பெறும் மதிப்பெண் இந்த உண்டு/உறைவிட மற்றும் பகுதிநேரப் பயிற்சிக்கு பயன்படுத்தப்படும்.

2. நான் முதல்வன் UPSC முதல்நிலைத் தேர்வு உதவித்தொகை திட்டத்திற்கு விண்ணப்பதாரர்கள் தங்கள் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கையின்படி தேர்வு செய்யப்படுவார்கள்.

**முக்கிய நாட்கள்**

| எண் | நிகழ்வு | தேதி |
|---|---|---|
| 1 | அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதி | 26.06.2025 |
| 2 | இணைய வழி விண்ணப்பம் தொடங்கும் தேதி | 26.06.2025 |
| 3 | விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 10.07.2025 |
| 4 | நுழைவுச் சீட்டு வெளியீடு | ஜூலை மாதம் மூன்றாவது வாரம். |
| 5 | தேர்வு நாள் | 26.07.2025 (10.00 am – 12.00 pm) |

**நுழைவுத் தேர்வு மையங்கள்:**

1. தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் தேர்வு மையங்கள் உள்ளன. விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவத்தில் தேர்வு எழுத ஏதேனும் ஒரு மையத்தை தேர்வு செய்ய வேண்டும். தேர்வு மையத்தின் இடம் நுழைவு சீட்டில் குறிப்பிடப்படும்.
2. தேர்வு மையங்களை அதிகரிக்கவும் குறைக்கவும் அதற்கேற்ப விண்ணப்ப தாரர்களை வேறு மையங்களுக்கு மாற்றவும் TNSDC–க்கு முழு அதிகாரம் உள்ளது.
3. விண்ணப்பதாரர்கள் தங்களின் சொந்த செலவில் தேர்வு மையத்திற்கு வர வேண்டும்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை:**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் இணையதளத்தில் இணைய வழியில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்:

https://portal.naanmudhalvan.tn.gov.in/prelims_registration/

***குறிப்பு:**

1. ஏற்கனவே மத்திய மாநில அரசு பணிகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் இந்த மதிப்பீட்டுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
2. இந்த உதவித்தொகையை பெறும் மாணவர்கள் 2026–ம் ஆண்டு நடைபெறவுள்ள ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் முதற்கட்டத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்து, ஆவணங்களை TNSDC–க்கு சமர்ப்பிக்க தவறிய விண்ணப்பதாரர்களுக்கு உதவித்தொகை நிறுத்தப்படும்.

**தேர்வு திட்டம்:**

**தேர்வு முறை பின்வருமாறு:**

| தேர்வு முறை | கொள்குறி வகை (OMR அடிப்படையிலானது) |
|---|---|
| கேள்விகளின் மொத்த எண்ணிக்கை | 100 (90 பொது அறிவு + 10 CSAT) |
| ஒரு வினாவிற்கான மதிப்பெண் | 2 |
| மொத்த மதிப்பெண்கள் | 200 |
| தேர்வு நேரம் | 2 மணி நேரம் |

**குறிப்பு:**

1. 1/3 மதிப்பெண்கள் தவறான பதில்களுக்கு எதிர் மதிப்பெண்களாக வழங்கப்படும்.
2. கேள்விகள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கும்.

**SYLLABUS OF THE EXAM**

**GENERAL STUDIES:**

1. Current events of national and international importance.
2. History of India and Indian National Movement.
3. Indian and World Geography–Physical, Social, Economic Geography of India and the World.
4. Indian Polity and Governance – Constitution, Political System, Panchayat Raj, Public Policy, Rights Issues, etc.
5. Economic and Social Development – Sustainable Development, Poverty, Inclusion, Demographics, Social Sector initiatives, etc.
6. General issues on Environmental Ecology, Biodiversity and Climate Change – that do not require subject specialization.
7. General Science

**CSAT**

1. Logical reasoning and analytical ability
2. General mental ability
3. Basic numeracy (numbers and their relations, orders of magnitude, etc.) – Class X level)
4. Data interpretation (charts, graphs, tables, data sufficiency etc. – Class X level)

ஊக்கத்தொகைக்கான வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு விவரங்கள்

**1. ஊக்கத்தொகை திட்டம் (மொத்தம்: 1000 விண்ணப்பதாரர்கள்)**

| **வகை** | பிற்படுத்தப் பட்டோர் | பிற்படுத்தப் பட்டோர் (முஸ்லிம்) | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் சீர் மரபினர் | ஆதிதிராவிடர் | அருந்ததியர் | பழங்குடியினர் | பொதுப் பிரிவினர் | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| **இட ஒதுக்கீட்டின் %** | 26.5 | 3.50 | 20 | 15 | 3 | 1 | – | |
| **மொத்தம்** | 265 | 35 | 200 | 150 | 30 | 10 | 310 | **1000** |

***மாற்றுத்திறனாளிகளுக்கான 4% இடங்கள் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து பெறப்படலாம்.**

**அகில இந்திய குடியமைப் பணிகள் பயிற்சி அமைப்பு (AISCSC):**

"நான் முதல்வன் யூ.பி.எஸ்.சி முதல்நிலை ஊக்கத்தொகை தேர்வு 2025"-ன் மதிப்பெண் சான்றானது, அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தின், சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் இயங்கி வரும் மையத்தின் முழுநேரப் பயிற்சிக்கு 225 விண்ணப்பதாரர்கள், பகுதி நேர பயிற்சிக்கு 100 விண்ணப்பதாரர்கள், கோவை மற்றும் மதுரையில் இயங்கி வரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி மையங்களின் முழுநேரப் பயிற்சிக்கு தலா 100 பேரை தேர்வு செய்வதற்கும் பயன்படுத்தப்படும்.

**மேற்படி பயிற்சி மையங்களைத்** (AICSCC, Chennai & ACCSCA, Coimbatore and Madurai) **தேர்வு செய்வதற்கான விருப்பம் கோரும் விண்ணப்பம் அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தால் பின்னர் தனியாக வெளியிடப்படும்.** இருக்கை ஒதுக்கீட்டிற்கான ஒவ்வொரு மையத்திற்கான தகுதிப் பட்டியல், NM மதிப்பெண் அட்டை, நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீடு மற்றும் மாணவர்களின் விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

**கட்டணம் முழுநேரம் மற்றும் பகுதிநேரம்: ஏதுமில்லை**

| **வகுப்பு(இனவாரியாக)** | **காப்புத் தொகை (திரும்ப வழங்கக்கூடியது)** |
|---|---|
| ஆதிதிராவிடர்/அருந்ததியர்/பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) மற்றும் சீர்மரபினர்/ பொதுப் பிரிவினர் | ரூ.3000/- |

*சென்னை மையத்திற்கு மட்டும் காப்புத் தொகை கட்டாயம்.

AICSCC – க்கான வகுப்புவாரி இட ஒதுக்கீடு விவரங்கள்:

| **பயிற்சியின் வகை** | **ஆதி திராவிடர்** | **அருந்ததியர்** | **பழங்குடியினர்** | **மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்** | **பிற்படுத்தப்பட்டோர்** | **பிற்படுத்தப் பட்டோர் (முஸ்லிம்)** | **பொதுப் பிரிவினர்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| (முழுநேரம்) விடுதியில் தங்கிப் பயிற்சி பெறுதல் **சென்னை** | 89 | 18 | 6 | 40 | 54 | 7 | 11 | 225 |
| (பகுதிநேரம்) மாலை நேர பயிற்சி பெறுதல் **சென்னை** | 40 | 8 | 2 | 18 | 24 | 3 | 5 | 100 |
| (முழுநேரம்) விடுதியில் தங்கிப் பயிற்சி பெறுதல் **கோயம்புத்தூர்** | 40 | 8 | 2 | 18 | 24 | 3 | 5 | 100 |
| (முழுநேரம்) விடுதியில் தங்கிப் பயிற்சி பெறுதல் **மதுரை** | 40 | 8 | 2 | 18 | 24 | 3 | 5 | 100 |

*மாற்றுத்திறனாளிகளுக்கான 4% இடங்கள் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து பெறப்படலாம்.

**வகுப்பு:**

**அ)** முழுநேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின், பயிற்சி நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

**ஆ)** பகுதி நேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின், பயிற்சி நேரம் வாராந்திர நாட்களில் மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரையிலும். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை ஆகும்.

**விடுதி:**

**அ)** முழுநேரப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குக் கட்டணமின்றி பயிற்சி, தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும்.

**ஆ)** பகுதி நேரப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்பட மாட்டாது.

**மேலும் விவரங்களுக்கு:**

**தொடர்புக்கான எண்கள்:**

- 9043710214 / 9043710211

**மின்னஞ்சல்:** nmcegrievances@naanmudhalvan.in

**நிர்வாக இயக்குனர்**
**தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம்**